# நற்செய்தி என்றால் என்ன?

## What is the Gospel ?

J.C. Choate



தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற

**கிருபையுள்ள வார்த்தை**

தபால் பெட்டி – 15, அரசரடி, மதுரை – 625 016.

போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com

## நற்செய்தி என்றால் என்ன ?

“சுவிசேஷம்” என்கிற வார்த்தைக்கு “நற்செய்தி” மற்றும் “மகிழ்ச்சியான செய்தி” என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ; சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று சொல்லியுள்ளார்” (ரோமர் 10:15)

சிருஷ்டிப்பின் தேவனைப் பற்றி ஒருபோதும் கேட்டிராத, மனித இனத்தின் மீதான அவருடைய மாபெரும் அன்பை அறிந்திராத, கிறிஸ்து மனமுவந்து செய்த தியாகத்தினால் சாத்தியமான இரட்சிப்பு பற்றி ஒருபோதும் கேட்டிராத ஒரு சூழ்நிலை எப்படியிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பாக்க முடியுமா ? அப்படிப்பட்ட உலகம் எவ்வளவு வேறுபட்டதாகவும், அர்தமற்றதாகவும் இருக்கும்.

ஆனால், இந்த மாபெரும் சக்தியங்களை இதற்கு முன்பு ஒருபோதும் கேட்டிராமல் இருந்தாலோ அல்லது வேதாகமத்தின்படி அவைகள் உங்களுக்கு விளக்கப்படாமல் இருந்தாலோ, அவைகளை நன்கு கற்றுக்கொள்ளும் வாய்ப்பு இக்கைப்பிரதியின் மூலம் கொடுக்கப்படுகிறது. நாங்கள் உங்களோடு நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறோம்.

கிறிஸ்துவின் நற்செய்தியென்பது அவர் நம் மீது அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களுக்காக நாம் மரிக்க வேண்டிய நிலையில் நமக்காக அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு , கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே மரணத்தை ஜெயித்தார் என்பதாகும். இந்த உண்மைகளினால்



நம்முடைய பாவங்களிலிருந்து நாம் இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதினார். “அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியபடுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே, நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்” (1கொரி 15:1-4)

சுவிசேஷத்தின் உண்மைகளை நாம் விசுவாசிக்க வேண்டுமென்றும், அத்தோடு ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமானால் அவர் சுவிசேஷத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும் வேதாகமம் போதிக்கிறது. பரலோகத்திலிருக்கிற தம்முடைய பிதாவினிடத்தில் திரும்புவதற்கு முன்பாக இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் இவ்விதமாகக் கட்டளையிட்டார். ‘‘நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்”. (மாற்கு 16:15). இதன் மூலம், கிறிஸ்து சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் கல்லறையிலிருந்து உயிர்தெழுந்ததார் என்று



தீர்க்கதரிசனம் உரைக்கபட்டபடியே பிரசங்கிக்க வேண்டியதாயிருந்தது. இன்னும், அவர்கள் ‘‘விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்’’ என்றும் பிரசங்கிக்கும்படியாகக் கட்டளையிடப்பட்டிருந்தார்கள் (மாற்கு 16:16)

தெசலோனிக்கே சபைக்கு இவ்விதமாக எழுதும்படி பவுலடியார் ஏவப்பட்டார். “தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்” இன்னும், பேதுருவும் இவ்விதமாக எழுதினார், ‘‘நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்தில் அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?(1பேதுரு 4:17)

சுவிசேஷத்திற்கு நாம் எப்படிக் கீழ்ப்படிய முடியும் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு, நற்செய்தியாயிருக்கிற கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய உண்மை நமக்கு உதவி செய்கிறது.

அடுத்ததாக, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் விதமாக முதலில் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும். பாவ வாழ்க்கையிலிருந்து மனதைத் திருப்ப வேண்டும். இயேசு



கிறிஸ்து மீதுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும். இறுதியாக அவர் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது போல நாமும் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட்டு புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு தண்ணீரிலிருந்து எழுந்திருக்க வேண்டும்.

இயேசு நமக்காக என்ன செய்தார் என்ற காட்சியை மனதில் கொண்டு செயல்படுவதன் மூலமும், இயேசு நமக்கு என்ன சொல்லியிருக்கிறாரோ அவைகளின்படி செய்வதன் மூலமும், கர்த்தர் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சித்து, தம்முடைய சபையில் நம்மைச் சேர்த்துக் கொள்கிறார் (மாற்கு 16:15:16; அப்2:38;ரோமர் 10:10;அப். 2:47)

இந்தக் கீழ்ப்படிதல் சம்மந்தமாக பவுல், “முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள்” (ரோமர் 6:17,18) என்று எழுதியுள்ளார்.

அதாவது, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்ததுபோல, நாம் பாவத்திற்கு மரிக்கிறோம். கிறிஸ்து கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது போல நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுகிறோம். அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது போல, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு ஞானஸ்நானமாகிய தண்ணீர் கல்லறையிலிருந்து எழுந்திருக்கிறோம். அதுதான் சுவிசேஷத்தின் முக்கியத்துவமும், இந்த உபதேசச் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதுமாயிருக்கிறது.



அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் விவரமாய் விளக்கப்பட்டிருக்கிறபடி, இருதயத்திலிருந்து மனப்பூர்வமாக அவருக்குக் கீழ்ப்படிகிற யாவரையும் தேவன் இரட்சிக்கிறார்.அந்த பெந்தெகொஸ்தே நாளிலே முதல்முறையாக சுவிஷேசம் பிரசங்கிக்கப்பட்டது. சபையாகிய ராஜ்யத்தின் கதவுகள் தேவனுடைய இரட்சிப்பின் அழைப்பை ஏற்றுக் கொள்பவர்களுக்காகத் திறக்கப்பட்டது. தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கும் பாவத்திற்கு,கிறிஸ்துவின் இரத்தம் தான் தேவனுடைய பதிலாயிருக்கிறது.

நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா? உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். இதன் மூலம் இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய அவருடைய ஆவிக்குரிய குடும்பமாகிய சபைக்குள்ளும். கிறிஸ்துவுக்குள்ளும் நீங்கள் பிரவேசிக்க முடியும்.

**ஆகவே, இன்றே தீர்மானியுங்கள் !**

கிருபையுள்ள வார்த்தை T.V. நிகழ்ச்சிகள்

தமிழன் T.V.

ஞாயிற்றுக்கிழமை காலை 6-45 மணி

செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணி

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :